IN THE COURT OF I ADDITIONAL SPECIAL JUDGE,
UNDER NDPS ACT, CHENNAI-104.
(Chapter XXIII code of Criminal Procedure)
**C.C. NO.104/2022**
DEPOSITION OF WITNESS FOR D.W.1

NAME : Tmt.Hemamalini
FATHER/HUSBAND/NAME :
OCCUPATION :
AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the date: 04.12.2025.

Signature of the Witness

Accused produced.

முதல் விசாரணை-

நான் தற்போது சென்னை நங்கநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் எக்ஸிக்யூட்டிவாக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகன். ஆஜர் எதிரி தரப்பில் இன்றைய தினம் நான் சாட்சியாக ஆஜராகி உள்ளேன். 05.02.2022 அன்று அதிகாலை 04.30, 04.45 மணியளவில் நானும் எனது மகனும் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த பொழுது காலிங் பெல் அடிக்கும் சத்தம் கேட்டு மேலே இருந்து பார்த்தபோது மூன்று நபர்கள் வெளியே நின்று கொண்டிருந்தார்கள். யார் என்று கேட்டபோது எனது மகனை விசாரிக்க வேண்டும் என்று கூறினார்கள். அவர்கள் யார் என்று தெரியாததால் அருகில் உள்ள பழவந்தாங்கல் காவல் நிலையத்திற்கு போன் செய்து கேட்டபோது அங்கிருந்து போலீஸ் இருசக்கர வாகனத்தில் சீருடைகள் அல்லாத இரண்டு போலீசார் அங்கு வந்தார்கள். அதன் பிறகு நாங்கள் கீழே இறங்கி வந்து லைட்டை போட்ட போது லைட்டை போட வேண்டாம் என்று கூறி விட்டார்கள். நாங்கள் வெளியே வந்து கேட்டபோது எனது மகனை Hit and Run சம்பந்தமாக ஒரு வாகனம் பதிவாகி இருப்பதாகவும் அது சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் என்றும் கூறினார்கள். நான் இரண்டு நாட்களாக எங்களது வாகனத்தை எனது மகன் வெளியே எடுக்கவில்லை என்று கூறினேன். ஆனால் அது சம்பந்தமாக எனது மகனை விசாரிக்க வேண்டும் என்றும் அவனை தன்னுடன் அழைத்துச் செல்வதாகவும் போலீசார் கூறினார்கள். நானும் வருகிறேன் என்று கூறிய போது போலீசார் எனது மகனை கட்டாயப்படுத்தி

எங்களது காரில் ஏற்றி இருபுறமும் இரண்டு போலீசார் அமர்ந்து கொண்டு எனது மகனே அந்த வாகனத்தில் கூட்டி சென்றார்கள் நான் இருசக்கர வாகனத்தில் அவர்களை பின்தொடர்ந்து சென்றபோது பழவந்தாங்கல் காவல் நிலையம் செல்லக்கூடிய பாதையில் செல்லாமல் வேறு பாதையில் மேற்படி கார் சென்றது. காலை 05.30, 06.00 மணி வாக்கு வரையிலும் நான் அவர்களை பின்தொடர்ந்து சென்றேன். ஓஎம்ஆர் ரோட்டிற்கு சென்ற பிறகு மேற்படி வாகனம் எங்கு சென்றது என்று தெரியவில்லை. நான் மீண்டும் பழவந்தாங்கல் காவல் நிலையம் வந்து போலீசார் வந்த இருசக்கர வாகனத்தின் எண்ணை கூறி விசாரித்த போது காலை 10.00 மணிக்கு மேல் வருமாறு போலீசார் என்னிடம் கூறினார்கள். நான் மீண்டும் காலை 10.00 மணிக்கு காவல் நிலையம் சென்று விசாரித்த போது 100 க்கு போன் செய்து கேட்டுக் கொள்ளுமாறு கூறினார்கள். நான் 100 க்கு போன் செய்து கேட்டபோது நீங்கள் ஏற்கனவே காவல் நிலையத்தில் தானே உள்ளீர்கள் அங்கேயே புகார் கொடுங்கள் என்று கூறினார்கள். அதனால் நான் எனக்கு தெரிந்த ஒரு நண்பரை கூட்டிக்கொண்டு கமிஷனர் அலுவலகம் சென்று எனது மகனை காணவில்லை என்று புகார் எழுதிக் கொடுத்தேன். அங்கிருந்த ஒரு பெண் அதிகாரி போனில் பேசிவிட்டு நான் கொடுத்த புகாரை பெற்றுக் கொண்டு அதற்கு எனக்கு ஒரு ஒப்புகை கடிதம் கொடுத்தார். நான் கொடுத்த புகாரை எனது மொபைலில் புகைப்படம் எடுத்து வைத்திருந்தேன். அதனையும் போலீசார் எனக்கு கொடுத்த ஒப்புகை கடிதத்தின் நகலையும் தாக்கல் செய்கிறேன். அவர்கள் என்னை செயின்ட் தாமஸ் காவல் துணை ஆணையாளர் அலுவலகத்திற்கு செல்லுமாறு கூறினார்கள். அதன் பேரில் நான் மேற்படி அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த வழியில் எனக்கு ஒரு போன் வந்தது அதில் கண்ணகி நகர் போலீசார் பேசுவதாக கூறி எனது மகனை மேற்படி காவல் நிலையத்தில் வைத்திருப்பதாக கூறினார்கள். அவர்கள் அழைத்ததின் பேரில் நான் கண்ணகி நகர் காவல் நிலையம் சென்ற பொழுது அங்கிருந்த ஒரு அலுவலகத்தில் இருந்த ஒரு நபர் எனது மகனை காரில் drugs வைத்திருப்பதாக கூறி ஒரு வழக்கில் கைது செய்திருப்பதாக கூறினார். அவர் என்னிடம் எனது மகனை வீட்டில் இருந்து அழைத்து வந்த பிறகு வழக்கு போட போகிறோம் ஊரை விட்டு சென்று விடுங்கள் என்று எவ்வளவோ கூறியும் எனது மகன் மறுத்துவிட்டதால் உயர் அதிகாரிகள் கூறியதன் பேரில் எனது மகன் மீது வழக்கு போட்டிருப்பதாகவும் சைதாப்பேட்டை நீதிமன்றத்திற்கு ரிமாண்ட் செய்வதற்காக கொண்டு செல்வோம்

அங்கு சென்று பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் கூறிவிட்டார். அந்த சமயத்தில் எனது கணவர் உடல் நலம் சரியில்லாமல் இருந்ததால் எனது மகன்தான் எனது கணவரை பார்த்து வந்தான். அதனால் அவன் போலீசார் கூறியபடி ஊரை விட்டு செல்வதற்கு சம்மதிக்கவில்லை என்று பின்னர் தெரிந்து கொண்டேன். நான் கண்ணகி நகர் காவல் நிலையம் சென்றபோது கமிஷனர் அலுவலகத்தில் நான் கொடுத்த புகாருக்கு எனக்கு வழங்கிய ரசீதை அவர்கள் வாங்கிக் கொண்டார்கள். அதனால் தற்போது ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்துள்ளேன்.

<u>குறுக்கு விசாரணை-</u> **(**அரசு தரப்பில்**)**

எதிரி எனது மகன் என்பதால் எதிரியை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக வேண்டி உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 100க்கு போன் செய்தது சம்பந்தமான கால் டீடெயில்ஸ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்லக்கூடிய நாள் விதத்தில் எனது மகனை எனது வீட்டிலிருந்து கூட்டிச் செல்வதை காட்டக்கூடிய சிசிடிவி புட்டேஜ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு தவிர எனது மகனுக்கு எதிராக வேறு எந்த குற்ற வழக்குகளும் இல்லை. எனது மகனுக்கும் காவலர்களுக்கும் இடையே முன் பகை எதுவும் இல்லை. நான் கண்ணகி நகர் போலீசாரிடம் கமிஷனர் அலுவலகத்தில் கொடுத்த புகாரைக் கூறி அவர்கள் அதற்கு ஒப்புதல் கொடுத்ததாக அதை காட்டிய போது தான் போலீசார் அதனை வாங்கிக் கொண்டார்கள். நான் சொல்வது போல் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் நான் முன் விசாரணையில் கூறியது போல் எந்த சம்பவங்களும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை**.**

**Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the Accused and admitted by the Witness in correct.**

**I Addl. Spl. Judge**

**Under NDPS Act, Chennai -104.**

I Addl.Spl.Judge